
# கழுகின் சத்தம்

## ஜனவரி 22, 2024



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

அவர் தமது கரங்களை நீட்டி, "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கூறின போது, அந்த நாளில் நான் அங்கே நின்று கொண்டிருக்க விரும்பினேன்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 54-07-20A கேதரா தேசத்து வெறிபிடித்த மனிதன்

19. இப்பொழுது, நான் சந்தோஷமா யிருக்கிறேன்.

எனக்குக் களைப்பாயுள்ளது.

நான் சரீரபிரகாரமாக களைப்படைந் திருக்கிறேன்.

ஒரு சாதாரண மனிதனுக்கு இல்லாத கஷ்டங்களும் காரியங்களும் எனக்குண்டு.

எப்படியாக சாத்தான் இரவும் பகலும் எல்லா நேரமும் என்னோடு சண்டை யிடுகிறான் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம்.

அந்தப் பிசாசுகளைத் துரத்தும்போது, அவைகள் உங்களைச் சுற்றி சுற்றி வந்து கொண்டேயிருக்கும். உங்களுக்குப் புரி கிறதா? ஆனால் அங்குள்ள அந்தக் காரியங்கள் எல்லாம்...

எனக்கு ஒரு யுத்தம் உண்டு, யாருமே அதைக் குறித்து அறிய மாட்டார்கள்.

ஆனால் நான் ஜனங்களை நேசிக் கிறேன். நான் அவர்களை என்னுடைய முழு இருதயத்தோடும் நேசிக்கிறேன். எனவே, அது ஜனங்களுக்குத் தெரியும்.

என்னுடைய ஊழியம் ஒரு பெரிய நிலைக்கு வருவதை, அது பெரியதாய் காணப்படும் நிலைக்கு வருவதை நான் ஒருபோதுமே அனுமதிக்கவில்லை.

அது நிச்சயமாக - அது நிச்சயமாக என்னுடைய மேலிடத்திற்குத் தான் போயாக வேண்டும்.

என்னுடைய ஊழியமானது தொடர்ந்து அற்பமாகவே இருந்து வருகிறது.

நான் ஒரு சில ஜனங்களோடு இடை படுவேன், ஏறக்குறைய அந்த நேரத்தில் கூட்டம் பெருகிக் கொண்டே வரும், பிறகு நான் வேறு ஏதோவொரு இடத்திற்குப் போய் விடுவேன், அப்படியே வேறு ஏதோவொரு இடத்திற்குப் போகிறேன்.

ஏனென்றால் என்னுடைய - என்னு டைய நோக்கம் முழுவதும் என்னுடைய பரலோகப் பிதாவைப் பிரீதிப்படுத்துகிற தாகவே இருக்கிறது.

அவரைப் பிரீதிப்படுத்துகிற அதை மாத்திரமே நான் செய்ய வேண்டியவனா யிருக்கிறேன்.

20. உங்கள் எல்லாருடைய ஜெபமும் எனக்கு-எனக்குத் தேவை.

அதுதான் எப்போதுமே என்னுடைய நோக்கமாக இருக்கிறது, கர்த்தர் என்னைச் சிறியவனாகவே வைத்திருக்கிறார். பாருங் கள். அந்த... அது...

அவர் என்னை உபயோகிக்கக் கூடிய தான இடத்தில், அங்கே தான் என்னால் இருக்க முடியும். அவர்... (அந்த) ஒரு இடத்திற்குப் (போகவே) நான் விரும்பு கிறேன் (I want to a place to where He…).

தூதர்கள் ஒன்றாகக் கூடிவரும்போது, அவர், “நல்லது, என்னுடைய ஊழியக்கார னாகிய வில்லியம் பிரன்ஹாம் என்னைக்

குறித்து தான் அக்கறை எடுத்துக் கொள்கிறான் என்பது எனக்குத் தெரியும்" என்று அவரால் கூற முடியும். அது - அதைத்தான் நான் - அவர் அதைச் செய்ய வேண்டும் என்பது தான் எனக்கு விருப்பம்.

பிறகு அந்த நாளில்... நான் அடிக்கடி வியப்படைவதுண்டு... **அவர் தமது கரங்களை நீட்டி, "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கூறின போது, அந்த நாளில் நான் அங்கே நின்று கொண்டிருக்க விரும்பினேன்.**

**நான் அனேகமாக ஒருபோதும் அவர் அவ்வாறு கூறுவதைக் கேட்க மாட்டேன், ஆனால் அங்கே ஒரு காரியத்தைக் கேட்கும்படி எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன், அவர் ஏதோவொரு நாளில், "என்னுடைய**

**நல்ல உண்மையான ஊழியக்காரனே, நீ நன்றாகச் செய்தாய்" என்று கூறுவதைக் கேட்பதையே எதிர்நோக்கிக் கொண்டிருக்கி றேன்.**

21. அது - அந்தச் சத்தத்தைக் கேட் கவே நான் ஏங்கித் தவித்துக் கொண் டிருக்கிறேன்.

அவர் தமது இராஜ்யத்திற்குள் மாத் திரம் என்னைப் போக அனுமதிப்பாரா னால், அப்பொழுது அவருடைய புனித மான கால்கள் அல்லது அவ்விதமான ஏதோவொன்றின் மேல் என்னுடைய கரங்களை வைக்கக்கூடிய அளவுக்கு நான் நெருங்கி மேலே செல்வேன், அது சரியாகவே இருக்கும். என்னால் அவரைக் காண முடியுமானால்...



அவன் என்ன செய்ய வேண்டுமென்று
பரிசுத்த ஆவி கூறும் வரைக்கும் பவுல்
காத்திருந்தான். பரிசுத்த ஆவிக்காக
காத்திருப்பது மிகவும் நல்லது.

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



# செய்தி: 63-07-17 கிறிஸ்துவினால் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுல்

80. பவுல் சரியானபடி கட்டப்பட்டவனாக இருந்தான். அவன் தவறான எதையும் கூறவில்லை. வார்த்தையினால் நடக்க அவன் பரிசுத்த ஆவியானவரால் பயிற்சி பெற்றான். அவனுக்கு ஒரு வழியில் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் தேவனோ அவனுக்கு வேறு வழியில் பயிற்சி அளித்தார். அவன் குறிக்கோள் என்னவாயிருந்தபோதிலும், அவன் கர்த்தருக்கு காத்திருக்க பரிசுத்த ஆவியால் பயிற்சி அளிக்கப்பட்டான்.

81. பரிசுத்த ஆவியின் மூலம் உங்களுக்கு ஒன்றைக் காண்பிக்கப் போகிறேன்

(காண்பிக்கலாம் என்று நம்புகிறேன்). ஒரு நாள் பவுலும் சீலாவும் ஒரு குறிப்பிட்ட நகரிலிருந்த தெருவின் வழியாய் வந்து கொண்டிருந்தனர். பவுல் அங்கு ஒரு எழுப்புதல் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தான். அப்பொழுது பிசாசு பிடித்த ஒரு பெண் அவர்களைப் பின் தொடர்ந்து சத்தமிட்டுக் கொண்டே வந்தாள். அந்த பெண்ணிலிருந்த பொல்லாத ஆவியைக் கடிந்து கொண்டு அவளை விட்டு வெளியே வரும்படி கட்டளையிட அப்போஸ்தலன் என்னும் முறையில் அவனுக்கு அதிகாரம் இருந்ததென்று பவுல் அறிந்திருந்தான். ஆனால் நீங்கள் கவனித்தீர்களா? அவன் ஒவ்வொரு நாளும் காத்திருந்து, முடிவில் திடீரன்று பரிசுத்த ஆவியானவர் அவனிடம் பேசினார். அவன் "இது தான் அந்த நேரம்" என்று

சொல்லி "அசுத்த ஆவியே, அவளை விட்டு வெளியே வா" என்று கட்டளை யிட்டான்.

82. பாருங்கள், அவன் கர்த்தருக்குக் காத்திருக்க அறிந்திருந்தான். அங்குதான் இன்று அநேகர் வார்த்தைக்கு நிந்தையை வருவிக்கின்றனர். அவர்கள் தங்கள் சுய ஆசைகளுடன் செல்கின்றனர். அதன் விளைவாக எவ்வளவு எழுப்புதல்கள் தோல்வியடைந்துள்ளன? கர்த்தர் என்ன கூறுகிறார் என்று அறிந்து கொள்ள சுவிசேஷகன் காத்திராத காரணத்தால்.

83. சிலர், "இங்கு வாருங்கள்" என்று அழைத்தால் அவர்கள் உடனே அங்கு சென்று விடுகின்றனர். ஏனெனில் அவர்களுடைய சங்கம் “போங்கள்” என்று உத்தரவிடுகிறது. பரிசுத்த ஆவி அதற்கு

மாறாக கூறியிருப்பார். இருப்பினும் அந்த மனிதனுக்கு மாகாண போதகர், அல்லது பேராயர் அல்லது வேறு பெரிய பதவியை அடைய வேண்டும் என்னும் ஆசை இருப்பதால் அவரை ஏதோ ஒன்று "நீ போக வேண்டும்" என்று இழுக்கிறது. இருப்பினும் அங்கு போகக் கூடாதென்று அவருக்குத் தெரியும். ஏனெனில் பரிசுத்த ஆவி "வேறிடத்துக்கு போ" என்றார். பாருங்கள், அவர் தன் ஸ்தாபனத்துடன் நுகத்தில் பிணைக்கப்பட்டிருக்கிறார். அவர் ஸ்தாபனத்துக்கு கட்டப்பட்டவராயிருக்கி றார். அவர் கிறிஸ்துவுடன் நுகத்தில் பிணைக்கப்பட்டிருந்தால், பரிசுத்த ஆவி யினால் வழி நடத்தப்படுவார்! அவர் இயேசுவினால் கட்டப்பட்டவராவார். அப்பொழுது யார் என்ன கூறினாலும் அவரை பாதிக்காது. அது சத்தமிடுகிற

வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத் தாளம் போலவும் அவருக்கு இருக்கும். அவர் தேவனுடைய சத்தத்துக்கு மாத் திரமே செவிகொடுத்து, அதை மாத்திரமே யன்றி வேறொன்றையும் பேசமாட்டார்.

84. யாராவது ஒருவர், "ஓ சகோ.ஜோன்ஸ், சகோ. ராபர்ட்ஸ்..." என் பார்களானால், அல்லது நமது தேசத்தி லுள்ள டாமி ஹிக்ஸ், ஓரல் ராபர்ட்ஸ், அல்லது டாமி ஆஸ்பர்ன் போன்ற பெரிய சுவிசேஷர்களிடம் யாராவது ஒருவர், "டாமி இங்கு வாருங்கள், நீங்கள் தேவனுடைய மகத்தான மனிதர்" அல்லது "ஓரல், என் மாமா அங்கு வியாதியாய் கிடக்கிறார். நீங்கள் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவரைச் சுகப் படுத்த உங்களிடம் வல்லமை உண்டு

என்று நான் நம்புகிறேன்” என்று கூறு வாரானால்.

85. ஒருக்கால் பரிசுத்த ஆவி அவரிடம் “இப்பொழுது போக வேண்டாம்” என்று கூறியிருக்கக்கூடும். இருப்பினும் அந்த மனிதனிடம் அவர் கொண்டுள்ள நட்பின் நிமித்தம், அவர் அவருடன் செல்ல கடமைப்பட்டிருக்கிறார். அவர் அப்படி போகாவிட்டால், அந்த மனிதனுக்கு சத்துருவாகிவிடுகிறார். அந்த மனிதன், "அவர் இன்னார் இன்னாரிடம் சென்று அந்த பிள்ளைக்கு அல்லது அந்த பையனை சுகமாக்கினார் என்று எனக்குத் தெரியும். நான் அநேக ஆண்டுகளாக அவர் நண்பராயிருந்தும் கூட, என் வீட்டுக்கு வரமாட்டேன் என்கிறார்'' என் பார். ஆனால் அவர் பரிசுத்த ஆவியினால் அங்கு பேகவேண்டாம் என்று தடை

செய்யப்பட்டால், அவர் போகாமலிருப் பது நல்லது - அவர் தேவனோடும் நுகத்தில் பிணைக்கப்பட்டிருந்தால். அவரு டைய நண்பரை அவர் நேசிக்கிறார். இருப்பினும் பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப் பட்டால் மாத்திரம் அங்கு செல்வது நல்லது. இல்லாவிட்டால் அவர் செல்வதில் ஒரு பிரயோஜனமுமில்லை. அந்த அனுபவம் எனக்கு எத்தனையோ முறை உண்டாயிருக்கிறது.

86. **அவன் என்ன செய்ய வேண்டு மென்று பரிசுத்த ஆவி கூறும் வரைக்கும் பவுல் காத்திருந்தான். பரிசுத்த ஆவிக்காக காத்திருப்பது மிகவும் நல்லது.**

# தேவன் வைத்திருந்த ஸ்தலம் எவ்வளவு அற்புதமாயிருந்தது!



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 65-08-29 சாத்தானின் ஏதேன்

39. இப்பொழுது நாம் பூமியை கவனிப்போமானால், தேவன் அதை தம்முடைய ஆதிக்கத்தில் கொண்டிருந்தார், தேவன் தம்முடைய ஆதிக்கத்தில்... இவ் வுலகை அவர் ஆதிக்கத்தில் கொண்டுருந்த போது தேவனுடைய வார்த்தை புறக் கணிக்கப்பட்டதன் விளைவாக சாத்தான் ஆதிக்கத்தைக் கைப்பற்றிக் கொண்டான். ஒரு சமயம் தேவன் இப்பூமியை அவர் ஆதிக்கத்தில் கொண்டிருந்தார். அதன் சுழற்பாதையில் அதனை வைத்தார். அப்பாதையில் அது சுழலும்படி செய்தார். எல்லாவற்றையும் அவர் செய்தார். தம் முடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். இப்பொழுது சாத்தான் ஆதிக்கத்தைக்

கைப்பற்றிய பின்னர் என்ன நேர்ந்தது என்று கவனிப்போம்.

40. இப்பூமியைக் கட்டி முடிப்பதற்குக் கர்த்தருக்கு 6000 ஆண்டுகள் சென்றன. அத்தனை ஆண்டுகள் அவருக்கு அவசிய மில்லை. ஆனால் அவர் அவ்வளவு சமயம் எடுத்துக் கொண்டார் ஆம், ஆறாயிரம் ஆண்டுகள், ஏனெனில் பரலோகத்தில் ஒரு நாள் பூலோகத்தில் ஆயிர வருட காலமென்று நமக்குக் கற்பிக்கப் பட்டுள்ளது. பூமியை நிறுவனம் செய்ய அவருக்கு ஆறாயிரம் ஆண்டுகள் சென்றன. நல்ல விதைகளை அவர் விதைத்து, அவை தங்கள் தங்கள் விதை யையுடைய கனிகளை முளைப்பிக்கச் செய்தார். அவர் சிருஷ்டித்த விதைகள் யாவும் நல்லவையானதால், அவை தங்கள் தங்கள் இனங்களை முளைப்பிக்க

வேண்டும். கர்த்தருக்கு 6000 ஆண்டுகள் பிடித்தன.

41. இவை யாவையும் அவர் சிருஷ்டித்த பின்னர், ஏதேனுக் கிழக்கிலுள்ள ஏதேன் தோட்டம் என்னும் அழகிய ஸ்தலத்தில் அவர் தமது இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார், தேவன் உலகத்தின் தலைமை செயலகத்தை எகிப்தில், ஏதேன் தோட்டத்தில் வைத்தார், சரியாக தோட்டத்தின் கிழக்கு முடிவு பகுதியில் தலைமையகம் இருந்தது.

42. எல்லாவற்றிற்கும் அதிகாரிகளாக தம் புத்திரனையும் அவன் மனைவியையும் அவர் நியமித்தார். அது உண்மை, அதைத்தான் கர்த்தர் செய்தார். அவர் முழு ஆதிக்கத்தையும் அவர்களுக் களித்தார். அவர்கள் காற்றைக் கட்டளையிட்டால், காற்று அடிக்காமல் நின்றுவிடும். மரங்

களுக்குக் கட்டளையிட்டால், அவை ஸ்தலம் மாறும்.

43. சிங்கமும் ஓநாயும் ஒருமித்து இரை தின்றன. அவைகளிடையே ஆட்டுக்குட்டி படுத்துக் கொள்ளும். பொல்லாங்கு என் பதே அப்பொழுது கிடையாது. தேவ னுடைய ஆதிக்கத்தின் கீழ் பரிபூரண சமாதானமும் பரிபூரண இசைவும் காணப் பட்டு, எல்லாமே பரிபூரணம் அடைந் திருந்தன. எல்லாமே இயங்க அவர் செய்தார். எல்லாமே புல் பூண்டுகள் புசித் தன. எதுவுமே சாக வேண்டிய அவசியம் இருக்கவில்லை. எதுவும் அழிய வேண்டிய அவசியம் உண்டாயிருக்கவில்லை. எல் லாமே பரிபூரணமுள்ளதாய் இருந்தன.

44. எல்லாவற்றிற்கும் அதிகாரியாக அவர் தமது அருமைப் பிள்ளைகளை -

அவருடைய புத்திரனையும் புத்திரியையும் - கணவன் மனைவியாக நியமித்தார்.

45. தேவன் அதிக திருப்தி கொண்டிருந்ததால், ஏழாம் நாளில் அவர் தம் கிரியைகளை முடித்து ஓய்ந்து, ஏழாம் நாளாகிய ஓய்வு நாளைப் பரிசுத்தமாக்கினார்.

46. 6000 ஆண்டு காலமாக அவர் உருவாக்கி உண்டாக்கினவைகளை அவர் திரும்பவும் ஒருமுறை பார்த்தார். அவர் மலைகளை உயரே தள்ளி, எரிமலைகளின் குழம்பை உலரச் செய்து, தற்போதைய நிலைகளில் அவைகளை நிறுவினார். ஓர் அழகிய ஸ்தலமாக அது அமைந்திருந்தது. அதைப் போன்று வேறெதும் காணப்படவில்லை.

47. தேவனுடைய மகத்தான பரதீசில் டைனோசார் (Dinosaur) என்னும் பிரம்

மாண்டமான மிருகங்கள் ஊர்ந்து கொண் டிருந்தன, அவை யாருக்கும் தீங்கிழைக் கவில்லை; பூனைக்குட்டிகளைப் போன்று அவை சாதுவான குணம் படைத்திருந்தன. அப்பொழுது பூமியில் வியாதிகளும், வருத்தங்களும், வியாதிகளை உண்டு பண்ணும் கிருமிகளும் இல்லை. ஓ! என்னே ஓர் ஸ்தலம்.

48. அழகிய பறவைகள் மரத்துக்கு மரம் பறந்து கொண்டிருந்தன. ஆதாம் அவைகளைப் பெயர் சொல்லி அழைக்க, அவை பறந்து வந்து அவன் தோள்களின் மேல் அமர்ந்து அவனிடம் கூவும். தேவன் வைத்திருந்த ஸ்தலம் எவ்வளவு அற்புத மாயிருந்தது!




# யோபு



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 63-11-24E மூவகை விசுவாசிகள்

யோபு என்னும் விசுவாசியைக் குறித்து சிந்திப்போம்.

100. **விசுவாசிகளானவர்கள் எப்பொழுதும் சோதனைக்குட்படுத்தப்படுகிறார்கள் !** “கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை சிட்சித்து தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்'' (எபி 12:6). சோதனைகளையும், கரடுமுரடான பாதைகளையும், உபத்திரவம் என்னும் தகிக்கிற சூரியனையும் ஞாபகம் கொள்ளுங்கள். ஆனால் உங்கள் இருதயத்திலுள்ள சத்தியத்தின் நிமித்தம் சரீரமானது இத்தகைய சோதனைகளையும், உபத்திரவங்களையும் சகித்து, உருவாக்கப்படுவ

தற்கு ஆயத்தமாகின்றது. தேவனுடைய புத்திரர்கள் அவருடைய வார்த்தையில் சரியாக உருவாக்கப்பட்டு, சாட்சியின் மாதிரிகளாயிருக்கிறார்கள். ஏனெனில் வார்த்தையாகிய தேவன் அவர்கள் மூலமாக ஜீவிக்கிறார். கவனிக்கிறீர்களா? நீ அடித்தளத்தில் போகும் மட்டும் சோதனைகள் உன்னை அசைத்து, உன்னுடைய உறுதி எதிலே சார்ந்திருக்கிறதென்று சோதித்தறியும். தேவனிடத்தில் வருகின்ற ஒவ்வொரு புத்திரனும் அவ்வாறே சோதிக்கப்படுகிறான்.

101. **யோபு உபத்திரவங்களாகிய சோதனைகளின் மூலம் கடந்து செல்ல வேண்டியதாயிருந்தது. அவனுடைய பிள்ளைகள், அவனுக்குண்டாயிருந்த யாவும் அவனை விட்டு எடுபட்டுப் போயிற்று. அவனுடைய சபை அங்கத்தினர்கள் அவனிடத்தில் வந்து அவனை ஒர் இரகசிய பாவியென்று கூறி,**

**அவனுக்கு விரோதமாக எல்லாவற்றையும் பேச முயற்சித்தார்கள். ஆனாலும் அவைகள் ஒன்றிற்காகிலும் அவன் செவிகொடுக்க வில்லை. ஏனெனில், தேவன் அவனிடம் எதிர்பார்த்த அன்றைக்குரிய கிருபையை அவன் நிறைவேற்றியவனாயிருந்தான்**; அவனை சோதிக்க சாத்தானுக்கு எந்தவித முகாந்திரம் உண்டாயிருக்கவில்லையென் பதையும் இந்தக் காரியத்தை செய்கிறவன் சாத்தான்தான் என்பதையும் யோபு அறிந்திருந்தான்! **அவனுடைய வியாதிக்கு தேவனே காரணமானவர் என்று யோபு விசுவாசித்த வரைக்கும் சாத்தான் யோபு சவுக்கினால் வாதித்தான். ஆனால் தேவன் இதற்கு காரணரல்ல என்றும், இந்த சோதனைகள் மூலம்தான் ஒரு உன்னத நிலைக்கு மாறிப்போகிறோம் என்ற வெளிப் பாடு யோபை சந்தித்தபோது, அவன் தெளிவு**

**பெற்றான். சாத்தானே அவனை உபத்திரவத் திற்குள்ளாக்கினான்; தேவனல்ல.**

102. இன்றைக்கும் அதுவே சம்பவிக்கின்றது. **உனக்கு ஏற்பட்டிருக்கிற சோதனைகளும், உபத்திரவங்களும் தேவன் உனக்கு அளிக்கின்ற தன்டனைகள் என்று பிசாசு உன்னிடம் சொல்ல முயற்சிப்பான். அது அவ்விதம் இல்லை ஐயா. சாத்தானே அதை செய்கிறவனாயிருக்கிறான். நீ சோதிக் கப்படும்படி தேவன் அனுமதித்து, உன்னு டைய பொக்கிஷமானது உலகத்தோடு கட்டப் பட்டிருக்கிறதா அல்லது பரலோகத்தில் கட்டப்பட்டிருக்கிறதா என்பதை அறிகிறார். ஏனெனில், "உங்கள் பொக்கிஷம் எங்கே யிருக்கிறதோ அங்கு உங்கள் இருதயமும் இருக்கும்" என்று வேதவசனம் கூறுகின்றது.**

103. யோபு சோதிக்கப்பட்டான். ஆனா லும் அவன், "என் மீட்பர் உயிரோடிருக் கிறார் என்றும், அவர் கடைசி நாளில்

பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப் போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்'' என்று கூறினான்.

104. அவனுடைய சரீரத்தில் ஏற்கெனவே புழுக்கள் இருந்தன என்பதை கவனித்தீர்களா? அவ்விதமே நம்முடைய சரீரத்திலும் புழுக்கள் இருக்கின்றன. காற்று புகா வண்ணமாயுள்ள சரீரக் கூட்டை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். ஆனால் உங்கள் தோலை தின்னும் புழுக்கள் ஏற்கெனவே அங்கிருக்கின்றன. தங்கள் கிரியையைச் செய்யத்தக்கதான நேரத்திற்காக அவைகள் அழைக்கப்பட காத்திருக்கின்றன. ஏரோது ராஜாவை ஞாபகம் கொள்ளுங்கள். அவன் சரீரத்தில் புண்கள் காணப்பட்டு அவனுடைய தோல் புழுக்கள்

அங்கே அவனை தின்றன. ஆகவே அவைகள் அங்கு கிரியை செய்ய ஆயத்தமாயிருக்கின்றன.

105. ''இந்த என் தோல் முதலான வைகள் புழுக்களால் அழிக்கப் பட்ட பின்பும், நான் என் மாமிசத்தில் இருந்து தேவனை பார்ப்பேன்'' ஆமென்! புழுக்கள் இந்த சரீரத்தை தின்று விட்டாலும், இதை முற்றிலுமாக அழித்து விட முடியாது. ஏனெனில் அது திரும்பவும் உண்டாகும். “அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்'' என்று யோபு கூறினான். ஏன் அவ்விதம் அவன் கூறினான்? அவன் ஒரு விசுவாசியாயிருந்தான். **சோதனையிலும், உபத்திரவத்தின் நேரத்திலும் அவன் உண் மையுள்ள ஒரு விசுவாசியாயிருந்தான் !**




என்
வாழ்க்கை
பூராவும்
அவர்
வழிகாட்டி
யாய்
இருந்து
வந்திருக்
கிறார்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 62-10-14E ஒரு வழிகாட்டி

107. என் வாழ்க்கை பூராவும் அவர் வழிகாட்டியாய் இருந்து வந்திருக்கிறார். அவர் என்னை ஜீவனுக்கு வழி நடத்தி யிருக்கிறார். அவர்தான் என்னை ஜீவ னுக்கு வழிநடத்தினார். அவரே என் ஜீவன். அவரில்லாமல் எனக்கு ஜீவனே யில்லை. அவரில்லாமல் வேறெதும் எனக்கு வேண்டாம். அவரே எனக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருக்கிறார். என் துன்ப நேரத்தில் அவர் என் பக்கத்தில் இருக்கிறார். நேற்று அவர் என்னை ஆசீர்வதித்தார், இன்றைக்கும் அதையே செய்கிறார். வேறெதை நான் எதிர்பார்க்க முடியும்? அவர் என்றென்றைக்கும் மாறா தவராயிருக்கிறார். அவருடைய நாமத்

திற்கு துதியுண்டாவதாக! ஆமென். ஆம், ஐயா. அவர் வாக்குத்தத்தம் செய்துள்ளார், அவர் நிறைவேற்றுவார். அவரே என் ஜீவன், அவரே என் வழிகாட்டி, எல்லாவற்றிற்கும் எல்லாமானவர். அவரை நான் நம்பியிருக்கிறேன். எனக்குக் கடின மான சோதனைகள் நேர்ந்தன. நான் எங்கு சென்றாலும், அவரையே நம்பியிருக்கி றேன், நீங்களும் அவ்வாறே செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். பெண் களே, நீங்கள் துணிகளை சலவை செய்யச் செல்லும் போது, அவரையே நம்பியிருங் கள். நீங்கள் கீழே பட்டினத்துக்கு செல்லும் போது அவரையே நம்பியிருங்கள்.

108. காட்டுப் பிரதேசங்களில் செல் வதில் நான் கைதேர்ந்தவன் என்னும் எண்ணம் எனக்கு ஒருமுறை தோன்றிற்று. பாருங்கள், நான் அதிகமாக வேட்டையாடி

யவன். எனவே நான் காட்டில் வழி தவறவே முடியாது என்ற எண்ணம் கொண்டிருந்தேன். என் தாய் பாதி சிவப்பு இந்தியர் எனவே காட்டுக்குச் செல்வதை நான் அதிகம் விரும்பினேன். நான் காட்டில் வழி தவறவே முடியாது, அங்கு நான், எங்கிருக்கிறேன் என்பதை நன்கு அறிவேன் என்று எண்ணியிருந்தேன்.

109. எங்கள் தேன் நிலவின் போது ... என் மனைவியை அவ்விஷயத்தில் ஒரு விதமாக சற்று ஏமாற்றினேன். நான் அவளிடம் "அன்பே, அக்டோபர் 23ம் தேதியன்று நாம் விவாகம் செய்து கொள்வது நல்லது'' என்றேன். அன்று தான் நான் விவாகம் செய்து கொள்ள வேண்டு மென்று கர்த்தர் என்னிடம் கூறியிருந்தார்.

110 ஒரு சிறு தேன் நிலவுக்குச் செல்லலாமென்று நான் தீர்மானித்தேன். அதற்காக காசை சேமித்து வைத்திருந் தேன். என் மனைவியை நயாகரா நீர் வீழ்ச்சிக்குக் கொண்டு சென்று, அங்கிருந்து அடிரோன்டாக் மலையின் மேலேறி சற்று வேட்டையாடலாம் என்று தீர்மானித்தேன். நான் மனைவியையும் பில்லியையும் கூட்டிச் சென்றேன். அப்பொழுது பில்லி சிறுவன். அவளை நான் தேன் நிலவுக்குக் கொண்டு சென்றேன். அது வேட்டை பயணமும்கூட. அப்படி செய்வது நல்ல தென்று எண்ணினேன். நான் அவளை மேலே கூட்டிச் சென்றேன்.

111. நான் காட்டு அதிகாரி திரு.டென் டனுக்கு கடிதம் எழுதினேன். நாங்கள் ஹரிக்கேன் மலையின் மேலும் செல்லத் தீர்மானித்திருந்ததால், நான் கடிதத்தில்,

"திரு. டென்டன் அவர்களே, நான் மலையின் மேல் வரப்போகிறேன். உங்களுடன் குளிர் பருவத்தில் கரடி வேட்டையாட விரும்புகிறேன்'' என்று எழுதியிருந்தேன்.

112. அவரும், 'சரி, பில்லி, மேலே வாருங்கள்'' என்று பதில் எழுதியிருந்தார். ஒரு பிரத்தியேக நாளை அவர் குறிப்பிட்டு, "அந்த நாளில் நான் அங்கிருப்பேன்" என்று எழுதியிருந்தார். நானும் மனைவியும் பில்லியும் ஒரு நாள் முன்னதாகவே அங்கு சென்றுவிட்டோம். அவருடைய அறை பூட்டியிருந்தது. காட்டுக்கு திரும்பிச் செல்லவேண்டுமெனும் எண்ணம் எனக்குள் தோன்றியது.

113. அந்த இடத்திற்கு தான் நானும் சகோ. ஃபிரட் சாத்மனும் அண்மையில் சென்றிருந்தோம். அப்பொழுது பரிசுத்த

ஆவியானவர் அங்கு நின்று கொண்டிருப் பதைக் கண்டேன் - மஞ்சள் ஒளி வடிவத்தில் புதரில் அசைந்து கொண்டிருந் தார். ஃபிரட் அங்கு நின்று கொண்டிருந் தார். பரிசுத்த ஆவியானவர் என்னிடம், "சற்று தனியே வா. நான் உன்னுடன் பேசவேண்டும்" என்றார். நான் சென்ற போது அவர் என்னிடம், "நாளை கவன மாயிரு. அவர்கள், உனக்கு கண்ணி வைத்திருக்கின்றனர்" என்றார். சகோ.ஃபிரட், அது சரியா? அன்றிரவு நான் வெர்மாண்டுக்கு சென்று நூற்றுக்கணக்கான ஜனங்களிடம், "எனக்கு கண்ணி வைக் கப்பட்டுள்ளது. அதை நான் பார்க்கத் தான் போகிறேன். அது எந்தவிடத்தில் என்று தெரியவில்லை'' என்றேன். அடுத்த இரவே அது நிகழ்ந்தது. அவர், "இந்தவிடத்தில் தான் உனக்கு கண்ணி வைக்கப்பட் டுள்ளது'' என்றார். ஆம், ஐயா நான் என்ன

செய்ய வேண்டுமென்று அப்பொழுது. பரிசுத்த ஆவியானவர் என்னை வழி நடத்தினார். ஓ. என்னே, அவர் கூறினது உண்மையாயிருந்தது. உங்களில் அநேக ருக்கு அது தெரியும். அதை முழுவதும் கூற எனக்கு நேரமில்லை.

114. அதே விடத்தில் நானும் மனை வியும் பில்லியும் நின்றுகொண்டிருந்த போது, அங்கு குளிரத் தொடங்கினது. திரு. டென்டன் அடுத்த நாள் தான் வருவார். எனவே நான் மனைவியிடம், " அன்பே, ஒரு ஆண் மானை (buck) நாம் வேட் டையாடிக் கொண்டு சென்றால் நலமா யிருக்கும். என்னிடமுள்ள பணத்தை நான் மிச்சப்படுத்த வேண்டும் ஏனெனில் இப்பொழுது தான் நமக்கு விவாகமாகி யுள்ளது இன்று வேட்டை கிடைத்தால், குளிர் காலத்திற்கு வேண்டிய மாமிச

ஆகாரம் நமக்கு கிடைத்து விடும்'' என்றேன்.

115. அவளும், "சரி, பில்லி, போய் வாருங்கள். ஆனால் காட்டில் இதற்கு முன்பு நான் இருந்ததில்லை என்பதை மாத்திரம் ஞாபகம் கொள்ளுங்கள்'' என்றாள்.

116. நான் அவளிடம், "இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தான் நான் மூன்று கரடிகளை இந்தவிடத்தில் கொன்றேன். அது அந்த பக்கம் மலையின் உச்சியில்" என்று கூறிவிட்டு, "பெரிய ஆண்மான் ஒன்றை வேட்டையாடிக் கொண்டு வருகி றேன். நமக்கு கரடியும் கிடைக்கலாம். மான் நமது குளிர்கால ஆகாரமாயிருக்கும்'' என்றேன். அது மிகவும் நல்லதாக தென் பட்டது. (அந்த குளிர்காலத்தில் நான்

வேலையிலிருந்து வீடு திரும்பினவுடன், நானும் மேடாவும் மாலையில் பழங் களைப் பொறுக்குவோம். பில்லி அதை விற்று வருவான். அந்த காசைக் கொண்டு நாங்கள் நிலக்கரி வாங்குவோம்). நான் அவளிடம், "என் துப்பாக்கியுடன் அங்கு போகப்போகிறேன். அங்கு நிறைய மான்கள் உள்ளன. ஒன்றாகிலும் என் கண்ணில் படும். அதை வேட்டையாடிக் கொண்டு வருவேன். சிறிது நேரத்தில் திரும்பி வந்து விடுவேன்" என்றேன். அவளும், "சரி'' என்றாள்.

117. நான் புறப்படும் போது சற்று குளிராயிருந்தது மூடுபனி இறங்கினால் என்ன நேரிடுமென்று நியூ ஹாம்ப்ஷயர். அல்லது சற்று உயரேயுள்ள நியூ இங்கிலாந்தைச் சேர்ந்த உங்களில் சிலருக்குத் தெரியும். மலையின் மேல்

எங்காவது மூடு பனி இறங்கினால், நாம் எங்கிருக்கிறோம் என்று தெரியவே தெரியாது. அவ்வளவு தான். உங்களுக்கு முன்னால் உங்கள் கையை நீட்டினால், அதைகூட காணமுடியாது. நான் கீழே இறங்கி, முகடை (ridge) கடந்து, மேலேறி னேன். அப்பொழுது ஒரு சிறுத்தையைக் கண்டேன். அதை நாம் வெவ்வேறு பெயரினால் அழைக்கிறோம். அது ஒன்பது அடி நீளம், 150 அல்லது 200 பவுண்டு எடையிருக்கும். அது கடந்து சென்றபோது, துப்பாக்கியை வேகமாக கையிலெடுத் தேன்; ஆனால் அதை சுடுவதற்கு போதிய அளவு வேகமாக எடுக்கவில்லை.

118. அது சென்ற திசையில் இலை களின் அசைவை கவனித்துக் கொண்டே நான் துரத்திச் சென்றேன். இலைகளின் அசைவை என்னால் கேட்க முடிந்தது.

அதற்கு நான்கு கால்கள் உண்டு. அதன் அடிச்சுவடுகளிலிருந்து அது இரண்டு கால் மிருகமல்ல என்று அறிந்து கொண்டேன். அது மான் அல்ல என்றும் எனக்குத் தெரியும். ஏனெனில் மான் குதித்து ஓடும். ஆனால் சிறுத்தையோ எளிதாக நழுவி விடும். கரடி நடக்கும் போது, காலை உருட்டிக் கொண்டே நடக்கும். எனவே அது சிறுத்தைதான் என்று அறிந்து கொண்டேன், அது மரத்தின் பின்னால் நின்று கொண்டிருந்தது. அதை நான் கவனிக்கவில்லை. ஆனால் நான் பார்த்த மாத்திரத்தில் அது மறைந்து விட்டது.

119. மலையுச்சியில் அது இலைகளை அசைத்துக் கொண்டு போகும் விதத்தையே கவனித்துக் கொண்டிருந்ததால், மூடுபனி இறங்குவதை நான் கவனிக்கவில்லை இந்த சிறுத்தையைப் பின்தொடர்ந்தே பள்ளத்

தாக்கின் வழியாகவும் மலையின் மேலும் நான் சென்று கொண்டிருந்தேன். "அதை எப்படியாவது பார்த்துவிடுவேன்'' என்று எண்ணினேன், நான் உயரமான ஓரிடத்திற்கு ஓடிச் சென்று, சுற்றும் முற்றும் பார்த்து தேடுவேன். ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று கூர்ந்து கவனிப்பேன். பின்பு கீழே இறங்கி வருவேன். இந்த சிறுத்தை சாமர்த்தியமாக மரத்திற்கு மரம் தாவிச் சென்றதால், மரக்கிளைகள் முறிந்து விழும் சத்தத்தை என்னால் கேட்க முடிந்தது. ஆனால் அதன் அடிச்சுவடுகளை என்னால் பின்தொடர முடியவில்லை.

120. நான் திரும்ப பள்ளத்தாக்குக்கு வந்தபோது, அங்கு ஒரு கிழ ஆண் கரடியை முகர்ந்தேன். "எப்படியாவது அது கிடைத்து விடும்" என்று எண்ணினேன். நான் மறுபடியும் முகர்ந்து நோக்கினேன்

நான் சற்று தூரம் சென்று ஏதாவது அடையாளம் தெரிகின்றதா என்று கவனித்தேன், எதையும் என்னால் காணமுடியவில்லை. நான் கீழே இறங்கி வந்து, மறுபடியும் மலைக்குச் சென்றேன். அப்பொழுது மூடு பனி இறங்குவதை கவனித்தேன். நான் மறுபடியும் முகர்ந்து நோக்கினேன். அந்த கரடி அங்குதான் எங்கோ இருந்தது. நான், "காற்று இந்தப் பக்கம் அடிக்கிறது, ஆனால் கரடியின் மணம் மறுபக்கத்திலிருந்து வருகிறதே! இருக்காது. நான் கடந்து வந்து விட்டேன். காற்று அந்த பக்கத்திலிருந்து வருகிறது. எனவே நான் முதன் முறையாக கரடி மணத்தை முகர்ந்த இடத்திற்கு திரும்பிச் சென்று அங்கிருந்து வர வேண்டும்'' என்று நினைத்தேன்.

121. நான் திரும்பிச் சென்று கொண்டிருந்த பாதையிலிருந்து பள்ளத்தாக்கைப் பார்த்தபோது, புதர்கள் அசைவதைக் கண்டேன். கறுத்த ஒன்று அங்கு அசைந்தது. ''அங்கிருக்கிறது'' என்று நினைத்து தோட்டாவை துப்பாக்கியில் வேகமாக நிறைத்து, அசையாது அங்கு நின்று கொண்டிருந்தேன். அது ஒரு பெரிய ஆண் மான் - மிகப்பெரியது. ''இது எனக்கு வேண்டுமென்று எண்ணியிருந்தேன்" என்று நினைத்து அந்த ஆண் மானைச் சுட்டேன்.

122, ''நல்லது" என்று நினைத்தேன். என் கைகளைத் துடைத்து, என் கத்தியை ஆயத்தப்படுத்தி, அதை மறுபடியும் உறையில் போட்டேன். நான், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! கர்த்தராகிய இயேசுவே, உமக்கு நன்றி. குளிர் காலத்திற்கு

வேண்டிய மாமிச ஆகாரத்தை எனக்குத் தந்து விட்டீர். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்' என்று நினைத்துக் கொண்டு துப்பாக்கி யைக் கையிலெடுத்தேன். "நான் பள்ளத் தாக்கு செல்லட்டும்" என்று எண்ணினேன். அப்பொழுது புயல் வரத்தொடங்கினது. ''இதோ புயல் வருகிறதே, நான் துரிதமாக மேடாவிடம் செல்லட்டும், நான் வேகமாக செல்லவேண்டும்'' என்று நினைத்துக் கொண்டேன்.

123. நான் பள்ளத்தாக்குக்கு மேலே சென்று, என் சிவப்பு 'கோட்'டை கழற்றி னேன். நான் இவ்வாறு பள்ளத்தாக்குக்கு மேலே ஓடினேன். நான் திசை தவறி விட்டேன். "நான் எங்கிருந்து புறப்பட் டேன்?'' என்று யோசிக்கத் தொடங்கி னேன். காற்று வேகமாக அடிக்கத் தொடங் கிவிட்டது மரங்கள் ஒன்றோடொன்று

மோதிக்கொண்டன. நான் நேராக ஹரிக் கேன் மலைக்குச்சென்று கொண்டிருக்கி றேன் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். நான் சற்று நேரம் நின்றேன். எனக்கு வியர்க்கத் தொடங்கினது. "என்ன நேர்ந் தது? நான் அரை மணி நேரம் முக்கால் மணி நேரமாக சென்று கொண்டிருக்கி றேன், நான் புறப்பட்டு வந்த இடத்தை என்னால் கண்டு பிடிக்க முடியவில் லையே!'' என்று நினைத்துக்கொண்டே மேலே நோக்கினபோது, நான் சுட்ட அந்த மான் அங்கு தொங்கிக் கொண்டிருந்தது. நான் மீண்டும் அந்த இடத்திற்கே வந்து விட்டேன். ''நான் என்ன செய்தேன்?" என்று வியந்தேன்.

124. நான் மறுபடியும் புறப்பட்டேன். "இந்த முறை எப்படியாவது கண்டு பிடித்துவிடுவேன். நான் சரியாக கவனிக்க

வில்லை" என்று நினைத்தேன். நான் ஒவ்வொரு அசைவையும் கூர்ந்து கவனித்து, தேடிக் கொண்டே சென்றேன். நான் தேடினேன், தேடினேன், மேகங்கள் வரத் தொடங்கின, பனிப்புயல் வரப்போகின்றது என்று எனக்குத் தெரியும். மூடுபனி கீழே இறங்கியிருந்தது. "இன்னும் சிறிது தூரம் செல்லலாம்" என்று எண்ணியவனாய் நடந்து சென்றேன், சென்றேன், சென்றேன். "மிகவும் வினோதமாயுள்ளதே. இந்த இடத்தை நான் முன்பு கண்டிருக்கிறேனே'' என்று நினைத்தேன். நான் பார்த்தபோது, நான் சுட்ட அந்த மான் அங்கு தொங்கிக் கொண்டிருந்தது. நான் மீண்டும் அதே இடத்திற்கு வந்து விட்டேன் .

125. நான் என்ன செய்து கொண்டிருந்தேன் தெரியுமா? இதை தான் சிகப்பு இந்தியர்கள், 'மரண நடை' (Death walk)

என்று அழைக்கின்றனர். பாருங்கள், வட்டம் சுற்றி. சுற்றி அதே இடத்திற்கு வருதல், நான் மிகவும் கைதேர்ந்த வழிகாட்டியென்றும், நான் ஒருபோதும் வழி தவறவே முடியாதென்றும் எண்ணி யிருந்தேன். யாருமே எனக்கு காட்டில் வழிகாட்டவேண்டிய அவசியமில்லை, எனக்கு எல்லா பாதையுமே நன்றாகத் தெரியும் என்று நினைத்திருந்தேன். பாருங் கள்?

126. நான் மீண்டும் புறப்பட்டேன். ''இம்முறை அதே தவறை புரியமாட்டேன்" என்று நினைத்தேன். ஆனால் மறுபடியும் அதே இடத்திற்கு வந்து விட்டேன்.

127. நான் பள்ளத்தாக்குக்கு சற்று மேலே சென்றேன். அப்பொழுது புயல் அடிக்கத் தொடங்கினது. எங்கு பார்த்தா

லும் பனி! இருட்டாகி விட்டது. மேடா இரவில் காட்டில் மரித்துப் போவாள் என்று பயந்தேன். ஏனெனில் காட்டில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அவளுக்குத் தெரியாது. பில்லி அப்பொழுது மூன்று வயது சிறுவன். "அவர்கள் என்ன செய்வார்கள்" என்று பயந்தேன். நான் சிறிது அடி எடுத்து வைத்தபோது, பாசி குளத்தில் கால் வைத்துவிட்டேன். "எங்கு பார்த்தாலும் மூடுபனி. எதையும் என்னால் காண முடியவில்லையே'' என்று நினைத் தேன்.

128. சாதாரணமாக இப்படிப்பட்ட சூழ்நிலையில், யாராகிலும் என்னுடன் இருந்திருப்பார்களானால், நான் ஓரிடத்தை அடைந்து, புயல் தீரும் மட்டும் ஓரிரண்டு நாட்கள் அங்கேயே தங்கியிருப்பேன். நான் சுட்டுக் கொன்ற மானை அறுத்து,

சமைத்து புசித்து, இதைக் குறித்து கவலையேபடாமல் இருந்திருப்பேன். ஆனால் என் மனைவியும் பிள்ளையும் காட்டில் மரிக்கும் தருவாயில் உள்ளபோது. என்னால் அப்படி செய்ய முடியாது.

129. எனவே "என்ன செய்யலாம்?'' என்று யோசிக்கத் தொடங்கினேன். நான் சற்று தூரம் நடந்து சென்றேன். 'நான் முதல் பள்ளத்தாக்கை கடந்து வந்தபோது, காற்று என் முகத்தில் அடித்தது. எனவே நான் இந்த வழியாகத் தான் வந்திருக்க வேண்டும். இந்த வழியில் தான் நான் செல்ல வேண்டும்'' என்று யோசித்தேன். நான் கணவாய்களின் வழியாக அலைந்து திரிந்தேன். ஆனால் நான் எங்கிருக்கிறேன் என்று அறிந்து கொள்ள முடியவில்லை. எனக்கு திகில் உண்டானது. "பில், ஒரு நிமிடம் பொறு. நீ காணாமற் போக

வில்லை'' யென்று என்னிடமே நான் பொய் சொல்ல முயன்றேன். அப்படி நீங்கள் பொய் சொல்ல முடியாது. உங்கள் உள்ளான மனச்சாட்சி நீங்கள் தவறென்று உங்களிடம் கூறும்.

130 நீங்கள், "நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன், நான் சபைக்குச் செல்கிறேன்" என்று கூறலாம். மரணப்படுக்கை வரும் வரை காத்திருங்கள். காரியம் வித்தியாசமாயுள்ளதென்று அப்பொழுது அறிந்து கொள்வீர்கள். உங்கள் மனச்சாட்சி - உங்களுக்குள் இருக்கும் ஒன்று - நீங்கள் தவறென்று உங்களிடம் கூறும். பாருங்கள்? நீங்கள் மரித்துப் போனால், பரிசுத்தமுள்ள தேவனை உங்களால் சந்திக்க முடியாது என்று உங்களுக்கு தெரியும். கடந்த இரவு நாம் பார்த்த விதமாக, அவருக்கு முன்பாக நிற்க, பரிசுத்த தேவதூதர்களும் கூட

தங்கள் முகங்களை மறைக்க வேண்டிய தாயுள்ளது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் உங்களை மறைக்காமல் போனால், நீங்கள் எப்படி அவர் சந்நிதியில் நிற்க முடியும்?

131. ''நான் எப்படியாகிலும் வழி கண்டுபிடித்து விடுவேன்" என்று நினைத்த வாறே, காட்டில் நடந்து செல்லத் தொடங் கினேன். அப்பொழுது ஏதோ ஒரு சத்தம் கேட்கத் தொடங்கினது. எனக்கு பயமுண் டாயிற்று. 'இப்படியே செய்தால், நான் துண்டு துண்டாகப் போய் விடுவேன்'' என்று எண்ணினேன். காட்டில் பாதை தவறிய மனிதனுக்கு அது தான் நேரிடும். அவன் துண்டு துண்டாகப் போய் விடுவான். அவன் துப்பாக்கியை எடுத்து தன்னை சுட்டுக் கொள்வான். அல்லது ஒரு குழியில் விழுந்து காலை ஒடித்துக் கொண்டு, அங்கேயே விழுந்து மரித்துப்

போவான். "நான் என்ன செய்வேன்?'' என்று நினைத்துக் கொண்டே நடந்து செல்லத் தொடங்கினேன்.

132. அப்பொழுது ஒரு சத்தம், "ஆபத்துக் காலத்தில் நான் அனுகூலமான துணை" என்று சொல்லிக் கொண்டே யிருப்பதை நான் கேட்டேன். நான் நடந்து கொண்டே சென்றேன்.

133. "இப்பொழுது எனக்கு பயம் சற்று தெளிந்து விட்டது. ஒரு சத்தம் என்னுடன் பேசுகின்றது'' என்று நினைத்து நடந்து செல்லத் தொடங்கினேன் அந்த சத்தம் "வ்யூ, வ்யூ, வ்யூ' என்னும் விசில் ஓசையை உண்டாக்கியது, சற்று முன்பு தான், நான், 'பில்லி, நீ காணாமற் போகவில்லை. நீ எங்கிருக்கிறாய் என்று உனக்குத் தெரியும். நீ காணாமற் போகவே

முடியாது. நீ சிறந்த வேட்டைக்காரன். நீ காணாமற் போகவே முடியாது'' என்று பெருமையடித்துக் கொண்டு என்னிடமே பொய் சொல்லிக் கொண்டேன்.

134, அவ்வாறு நாம் பொய் சொல்லமுடியாது. ஏனெனில் இங்கு ஒரு சிறிய சக்கரம் சுழன்று, "நீ வழி தவறி விட்டாய். அது உனக்குத் தெரியும்' என்று சொல்லும்.

135. "நான் வழிதவறவில்லை. நான் எப்படியாவது வழி கண்டு பிடித்து விடுவேன்'' என்று நினைத்துக் கொண்டே நடந்து சென்றேன். காரியங்கள் வினோத மாகத் தொடங்கின, காற்று அடித்து, பனி இங்கும் அங்கும் பறக்கத் தொடங்கினது. என் மனைவியையும் பிள்ளையையும் நினைக்கத் தொடங்கினேன்

136. மறுபடியும் , "ஆபத்துக் காலத்தில் நான் அனுகூலமான துணை'' என்னும் சத்தத்தை நான் நேரடியாகக் கேட்டேன். அப்பொழுது நான் ஒரு போதகராக, இக்கூடாரத்தில் பிரசங்கம் செய்யும் போதகராக இருந்தேன்.

187. " என்ன செய்யலாம்?" என்று நினைத்தேன். நான் நின்று சுற்றும் முற்றும் பார்த்தேன். மூடுபனி முழுவதுமாக இறங்கி விட்டது. அவ்வளவுதான். வேறொன்றும் செய்ய முடியாது. "என்ன செய்யலாம்?" என்று திகைத்தேன் நான், "ஐயா, நான் வாழத் தகுதியற்றவன். எனக்கு அதிக தன்னம்பிக்கை இருந்தது. நான் பெரிய வேட்டைக்காரன் என்று எண்ணியிருந்தேன். ஆனால் நான் அப்படியல்ல" என்று நினைத்துக் கொண்டேன்.

138. சகோதரனே, நான் எப்பொழுதும் அவரையே நம்பியிருக்கிறேன். துப்பாக்கி சுடுதலில் நான் அநேக சாதனைகள் புரிந்திருக்கிறேன். மீன் பிடிப்பதிலும் நான் ஒன்றுமற்றவன். ஆனால் நான் எப்பொழுதும் அவரையே நம்பியிருக்கிறேன். சுடுவதிலும் நான் ஒன்றுமற்றவன். ஆனால் அவரோ நான் உலக சாதனைகள் புரியும்படி செய்திருக்கிறார். பாருங்கள்? எழுநூறு, எண்ணூறு கெஜ தூரத்திலிருந்து நான் மானைச் சுட்டுக் கொன்றிருக்கிறேன். ஒரு குறி கூட தவறாமல், முப்பந்தைந்து மிருகங்களைக் கொன்றிருக்கிறேன். அப்படிப்பட்ட சாதனைகளை நீங்கள் எங்காகிலும் படித்ததுண்டா? நானல்ல, அவரே. அவரை நான் நம்பியிருக்கிறேன்.

“என்ன செய்வது?'' என்று திகைத்தேன்.

139. அப்பொழுது அந்த சத்தம் அருகில் வரத் தொடங்கினது: "ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணை. அனுகூல மான துணை".

140. ''கர்த்தர் என்னுடன் பேசுகின் றாரா?'' என்று நினைத்தேன். நான் தொப் பியைக் கழற்றினேன். நான் உலாவும் காவலர் (Patrol) தொப்பியை அணிந்து கொண்டிருந்தேன். ஒரு சிவப்பு கைகுட்டை அதில் சுற்றப்பட்டிருந்தது. என் தொப் பியை கீழே வைத்தேன். என் கோட்டை கழற்றினேன். அது நனைந்திருந்தது. அதை கீழே வைத்து விட்டு, துப்பாக்கியை மரத்தில் சாய்த்து வைத்தேன். நான் ''பரலோகப் பிதாவே, என் திறனுக்கு மீறின நிலைக்கு வந்து விட்டேன், என்னுடன் பேசும் ஒரு சத்தத்தைக் கேட்கிறேன். அது நீர் தானா?' என்றேன். நான், "நான் ஒரு

வேட்டைக்காரன் அல்லவென்று உம்மிடம் ஒப்புக்கொள்ளப் போகிறேன். என் வழியை என்னால் கண்டுபிடிக்க முடிய வில்லை. எனக்கு நீர் உதவி செய்ய வேண்டும். எனக்கு அதிகம் தெரியும் என்றும், நான் காட்டில் வழி தவறவே மாட்டேன் என்றும் நினைத்து இப்படிப் பட்ட காரியங்களைச் செய்ததால் நான் இனிமேல் வாழத்தகுதியற்றவன். ஆண்ட வரே, நீர் எனக்குத் தேவை. என் மனைவி நல்லவள். என் குழந்தை - அவனுடைய தாய் மரித்து விட்டாள். இவள் அவனுக்குத் தாயாக இருக்க முயல்கிறாள், அவளை இப்பொழுது தான் நான் விவாகம் செய்தேன். அவளும் குழந்தையும் காட்டில் இருக்கின்றனர். இருவரும் இன்றிரவு மரித்து விடுவார்கள். அந்த காற்று உஷ் ணத்தை பூஷ்யத்துக்கு கீழே பத்து டிகிரிக்கு கொண்டு வந்து விடும். அந்த குளிரில்

எப்படி உயிர் வாழ்வதென்று அவர்களுக்குத் தெரியாது, இன்றிரவு அவர்கள் மரித்து விடுவார்கள், தேவனே, அவர்கள் மரிக்க விட்டு விட வேண்டாம். என்னை அவர்களிடம் கொண்டு சேர்ப்பீராக! அப்பொழுது அவர்கள் மரிக்காமல் பாதுகாத்துக் கொள்வேன். நான் பாதை தவறி விட்டேன். தேவனே, நான் பாதை தவறி விட்டேன்! என் வழியை என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. எனக்குதவி செய்ய மாட்டீரா? என் சுயநல போக்கை மன்னியும். உம்மையன்றி என்னால் ஒன்றும் செய்ய இயலாது, நீரே என் வழிகாட்டி. ஆண்டவரே, எனக்குதவி செய்யும்" என்று ஜெபித்தேன்.

141. நான் எழுந்து நின்று, " ஆமென்' என்றேன். என் கைகுட்டையையும் என் 'கோட்'டையும் கையிலெடுத்துக் கொண்

டேன், தலையில் தொப்பியை அணிந்து கொண்டேன். என் துப்பாக்கியை கையி லெடுத்தேன் நான், ''எனக்குத் தெரிந்த வரை சிறந்தவழியில் நான் நேராகச் செல்லப் போகிறேன. நான் வட்டம் சுற்றி சுற்றி அதே இடத்திற்கு வந்து கொண் டிருக்கிறேன். தேவனாகிய கர்த்தாவே, என் வழிகாட்டியே. நீர் காண்பிக்கும் வழியில் நான் செல்வேன்" என்றேன்.

142. நான் இந்த வழியில் நடந்து செல்லத் தொடங்கினேன். நான், "இதுதான் சரியான வழி. இந்த வழியில் நேராகச் செல்லப் போகிறேன். நான் வழி மாறப்போவதில்லை. இந்த வழியில் நேராகச் செல்லப் போகிறேன்'' என்று தீர்மானித்தேன். அந்த வழியில் சென்றிருந் தால், தான் கனடாவை அடைந்திருப்பேன். பாருங்கள்?

143. அப்பொழுது யாரோ ஒருவர் என் தோளைத் தொடும் போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. அது ஒரு மனிதனின் கையைப் போல் தோன்றினது. நான் திரும்பிப் பார்த்தேன். யாரும் அங்கு நின்று கொண்டிருக்கவில்லை, "இது என்ன?" வென்று அதிசயமுற்றேன், நான் கூறுவது உண்மை. வேதாகமம் எனக்கு முன்னால் உள்ளது, என் வழிகாட்டியும் நியாயா திபதியுமாகிய தேவன் இங்கு பிரசன்ன ராயிருக்கிறார். நான் மேலே நோக்கினேன், அப்பொழுது இந்த பக்கத்தில் மூடுபனி மறைந்து, ஹரிக்கேன் மலையின் மேலுள்ள கோபுரத்தை என்னால் காண முடிந்தது. எனக்கு வேட்டைத் திறன் இருந்த போதிலும், இவ்வளவு நேரமாக அந்த கோபுரத்தை விட்டகன்று சென்று கொண் டிருந்தேன். அப்பொழுது மாலை நேரமாகி விட்டது. நான் திரும்பி, அந்த திசையை

நோக்கி நடக்கத் தொடங்கினேன். நான் தொப்பியைக் கழற்றி கைகளையுயர்த்தி, 'தேவனே, எனக்கு வழி காட்டும். நீரே என் வழிகாட்டி'' யென்று ஜெபித்தேன்.

144. நான் நடக்கத் தொடங்கினேன். நான் செங்குத்தான பாறைகளின் மேல் ஏறிச்செல்ல வேண்டும் அப்பொழுது இருட்டாகி விட்டது. மான்கள் என் முன்னால் துள்ளி ஓடின. நான் எதையும் யோசனை பண்ணாமல், அந்த கோபுரத்தை நோக்கி நடக்கத் தொடங்கினேன்,

145. அந்த கோபுரத்தை நான் அடைந்து விட்டால் - வசந்த காலத்தில் நானும் திரு.டென்டனும் தொலைபேசி கம்பிகளை அங்கு நாட்டினோம். ஹரிக் கேன் மலையிலிருந்து கீழே மூன்றரை நான்கு மைல்கள் வரை நாங்கள் ஒரு

பாதையில் அந்த கம்பிகளை நாட்டினோம். ஆனால் பனியின் காரணமாக அந்த பாதை கண்ணுக்குத் தெரியவில்லை. காற்று பாலமாக வீசினது. இருட்டாகி விட்டது. பனியும் பெய்து கொண்டிருந்ததால், எங்கிருக்கிறோம் என்றே தெரியவில்லை. நான் செய்யக்கூடிய ஒன்றே ஒன்று ... நான் ஒரே பாதையில் மலையின் மேலேறிக் கொண்டிருந்தேன். அந்த கோபுரத்தை அடைய ஆறு மைல் தூரம் இருந்தது. நான் கோபுரத்தைக் காணும் அளவிற்கு, ஆறு மைல் தூரம் வரைக்கும் மூடுபனி மறைந்தது என்பதைக் குறித்து சற்று யோசித்துப் பாருங்கள்!

146. நான் ஒரு கையில் துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டு, மற்ற கையை உயர்த்தினவாறே, அந்த தொலைபேசி கம்பியைத் தேடி நடக்கத் தொடங்கினேன்,

அந்த தொலைபேசி கம்பி திரு.டென்ட னின் அறையிலிருந்து மரங்களின் வழி யாக கீழே கொண்டு வரப்பட்டிருந்தது. அவர் தம் மனைவியிடம் மலையிலிருந்து பேசுவதற்காக இந்த ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. அந்த தொலைபேசி கம்பியை நாட்ட அவருக்கு நான் வசந்த காலத்தில் உதவி செய்தேன், நான் கையை உயர்த்தினவாறு, 'தேவனே, அந்த கம்பியை நான் தொடும்படி செய்யும்'' என்று ஜெபித்தேன். கையையுயர்த்திக் கொண்டேயிருந்தால் அது இரணமாகி விட்டது. அதிக களைப்பும் ஏற்பட்டது. அதை என்னால் உயர்த்திக் கொண்டே யிருக்க முடியவில்லை. எனவே துப்பாக் கியை இந்த கையில் பிடித்து மறு கையையுயர்த்தினேன். அந்த தொலைபேசி கம்பியை காணத் தவறக்கூடாது என்பதற் காக, இரண்டு அடி பின்னால் எடுத்து

வைத்து, கையையுயர்த்தி, நடக்கத் தொடங்குவேன். இப்படியாக நடந்து கொண்டே சென்றேன். இருட்டாகி விட்டது. காற்று பலமாக அடிக்கத் தொடங்கினது. நான் ஒரு மரக்கிளையை பிடித்து, "இது தான்'' என்பேன், பார்த்தால் அது தொலைபேசி கம்பியாயிருக்காது.

147. என்னால் முடியாது என்று முயற்சியை கைவிட எத்தனித்த நேரத்தில் என் கை ஏதோ ஒன்றின் மேல் பட்டது. ஓ, என்னே! நான் காணாமற் போனபோது, கண்டுபிடிக்கப்பட்டேன். அந்த தொலை பேசி கம்பியை நான் இறுகப் பிடித்துக் கொண்டேன். நான் துப்பாக்கியை கீழே வைத்து விட்டு. தொப்பியை கழற்றி, அங்கு நின்று, "ஓ, தேவனே, காணாமற் போன பிறகு கண்டு பிடிக்கப்படும் போது, எத்தகைய நல்லுணர்வு ஏற்படுகின்றது!

இந்த தொலைபேசி கம்பியின் மறு முனையை அடையும் வரை இதை நான் விடமாட்டேன். நான் இறுகப் பிடித்துக் கொள்வேன். அது என்னை என் அருமையானவர்களிடம் வழி நடத்திச் செல்லும். அங்கு என் மனைவியும் குழந்தையும் நான் எங்கிருக்கிறேன் என்று அறியாமல் திகைத்து, தீ மூட்டுவது எப்படியென்று அறியாமல், என்ன செய்வ தென்று பதறிப் போயிருப்பார்கள். காற்று பலமாக அடித்துக் கொண்டிருக்கிறது. மரக்கிளைகளும் முறிந்து விழுந்திருக்கும்'' என்றேன். அந்த கம்பியை நான் விடவே யில்லை. அதை இறுகப் பிடித்துக் கொண் டேன். அது என் அருமையானவர்கள் இருந்த இடத்திற்கு என்னை வழிநடத் தினது.

148. அது ஒரு பயங்கரமான அனுபவம். காணாமற் போன நான் மீண்டும் என் வழியைக் கண்டு பிடித்தது ஒரு பெரிய அனுபவம். ஆனால் அது அவ்வளவு முக்கியமல்ல. ஒரு நாள் நான் பாவத்தில் மூழ்கி காணாமற் போனேன். ஏதோ ஒன்றைக் கண்டுபிடிக்க நான் ஒவ்வொரு சபைக்கும் சென்றேன், நான் ஏழாம் நாள் ஆசரிப்போரிடம் சென்றேன். அவர்கள், "ஓய்வுநாளைக் கைக்கொள். மாமிசம் புசிப்பதை நிறுத்தி விடு" என் றனர். நான் முதலாம் பாப்டிஸ்டு சபைக்குச் சென்றேன். அவர்கள், "நீ எழுந்து நின்று, தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதாக அறிக்கை யிடு. அப்பொழுது நாங்கள் உனக்கு ஞானஸ்நானம் கொடுப்போம்" என்றனர். அங்கெல்லாம் ஒன்றுமேயில்லை. ஆனால் ஒரு சிறிய நிலக்கரி கொட்டிலில் என்

கரங்களையுயர்த்தி ஜெபித்த போது, நான் ஏதோ ஒன்றைப் பிடித்துக் கொண்டேன். அதை இப்படி கூறலாம் - ஏதோ ஒன்று என்னைப் பிடித்துக் கொண்டது. அது தான் ஜீவ கம்பி (Life Line), வழிகாட்டி. அவர் இது வரைக்கும் என்னைப் பாதுகாப்பாக நடத்திக் கொண்டு வந்திருக்கிறார். அந்த கம்பியிலிருந்து என் கையை நான் எடுத்து விடப்போவதில்லை. என் கரங்களால் அவரைப் பிடித்து கொண்டிருக்கிறேன் பிரமாணங்கள், கோட்பாடுகள், ஸ்தாபனங் கள் என்ன வேண்டுமானாலும் செய்யட் டும். நானோ வழிகாட்டியை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு விலையேறப்பெற்றதாயுள்ள இப்பூமியி லுள்ள அனைத்தும், பரலோகத்திலுள்ள அனைத்தும் இக்கம்பியின் முடிவில் தான் உள்ளன. இவ்வளவு தூரம் அவர் என் னைப் பாதுகாப்பாக கொண்டு வத்திருக்

கிறார். எஞ்சயுள்ள வழியில் செல்வதற்கும் நான் அவரையே நம்பியிருக்கிறேன். "பரிசுத்த ஆவியாகிய அவர் வரும் போது, உங்களை எல்லா வெளிச்சத்திற்கும் நடத்துவார்."

149. நண்பர்களே, அந்த பரிசுத்த ஆவியானவர் இன்று நான் உள்ள நிலை வரைக்கும் என்னை வழி நடத்திக் கொண்டு வந்திருக்கிறார். அவர் என்னை இந்நிலைக்கு கொண்டு வந்திருக்கிறார். அவரை நான் மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். இவ்வுல கிற்கும், மேலேயுள்ள மறு உலகிற்கும், அவர் ஒருவர் மாத்திரமே வழிகாட்டியென அறிந்திருக்கிறேன். நான் வேட்டைக்குச் செல்லும் போது அவரே எனக்கு வழிகாட்டி. நான் மீன் பிடிக்கச் செல்லும் போது, அவரே எனக்கு வழிகாட்டி.

யாருடனும் நான் பேசும் போதும் அவரே எனக்கு வழிகாட்டி. நான் பிரசங்கம் செய் யும் போது, அவரே எனக்கு வழிகாட்டி, நான் உறங்கும் போது, அவரே எனக்கு வழிகாட்டி.

150. நான் மரிக்கும் போது, அவர் அந்த நதியில் நின்று கொண்டு, என்னை அதன் வழியாக வழிநடத்துவார். நான் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்... உமது தடியும் என்னைத் திருத்தி, நதியைக் கடக்க வழி நடத்தும்.







# கழுகின் சத்தம்

## ஜனவரி 22, 2024



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து